VIRUDHUNAGAR MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 31.12.2019

| Date of Council meeting | Decision Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 31.12.2019 | 535 | **பொருள் – 1**<br>இந்நகராட்சி T.C.K.பெரியசாமி தெரு மற்றும் P.P.வையாபுரி நந்தவனம் தெருவில் உள்ள நகராட்சி பொதுகழிப்பிடம் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் இடிந்து தரைமட்டமாக இருந்து வருகிறது. மேற்படி 35420 சதுர அடி காலியிடத்தினை நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் தரைவாடகை அடிப்படையில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>கோப்பு எண். 7825 / 2015 / அ1. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 536 | **பொருள் – 2**<br>இந்நகராட்சியின் பல்வேறு பகுதிகளில் தார்ச்சாலை, சிமெண்ட் சாலை , பேவர் பிளாக் தளங்கள் மற்றும் சிறுபாலம் சீரமைப்பு பணியினை பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்ள ரூ2.15 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கும், அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.7318–2/19/இ1. | |
| | 537 | **பொருள் – 3**<br>விருதுநகர் நகராட்சியின் ஆனைக்குட்டம் குடிநீரேற்று நிலையத்தில் உள்ள 60 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார்க்கான ஆயில் ஸ்டாட்டர் (ATS) அடிக்கடி பழுது காரணமாக குடிநீர் பணிகள் பாதிப்பு ஏற்படுவதால் புதியதாக மேற்படி குதிரை திறன் மின்மோட்டாரின் உபகரணங்களுடன் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.758/2/19/இ2. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 538 | **பொருள் – 4**<br>கே.வி.எஸ். 74-வது பொருட்காட்சி வருகின்ற 27.03.2020 முதல் 19.04.2020 வரை 24 நாட்கள் இந்நகர் கச்சேரி ரோடு (மதுரை ரோடு) கதவு எண்.110, சர்வே வார்டு எண்-2, பிளாக் எண்.-1, சர்வே எண்கள் - 1/2(A), 7/1, 7/2, 7/4, 7/5, 8, 9(P), 10(P), 15/1, 15/2, 15/3(P)-ல் அமைந்துள்ள K.V.S. பள்ளி வளாகத்தில் அமையும் இடத்தில் K.V.S. 74-வது பொருட்காட்சி - 2020 நடத்த இருப்பதாகவும், அதற்கு இந்நகராட்சியின் தடையின்மைச்சான்று வழங்கக்கோரி வரப்பெற்ற கே.வி.எஸ்.பொருட்காட்சி கமிட்டியின் 06.12.2019ம் தேதிய விண்ணப்பம் மன்றத்தில் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு.**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பொருட்காட்சி நடத்துவதற்கு தடையின்மை சான்று வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>3. மேற்கூறிய கோரிக்கைகளை அரசுக்கு பரிந்துரை செய்யவும் அரசின் பரிந்துரையின்படி செயல்பட ஒப்புதல் வழங்கலாம.<br>ந.க.எண்.7458/2019/எப்2. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>539</td>
<td>
பொருள் – 5
இந்நகராட்சியின் மதுரை சாலை, வீராச்சாமி தெரு, பாரதியார் தெரு பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் 110 MM PVC பைப்புகள் தேவையான உதிரி பொருட்களுடன் விநியோகம் செய்து குழாய் பதிக்கும் பணி செய்திட இந்நகர்மன்ற தீர்மான எண்.515, நாள்.27.11.2019ல் ரூ.1.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 22.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வஎண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.என்.பாண்டியராஜ், ஒப்பந்ததாரர், விருதுநகர்.</td><td>மதிப்பீட்டை விட 0.45 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஜி.செல்வேந்திரன், ஒப்பந்ததாரர், விருதுநகர்.</td><td>மதிப்பீட்டை விட 4.81 சதவிகிதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.என்.பாண்டியராஜ், ஒப்பந்ததாரர், விருதுநகர். அவர்கள் மதிப்பீட்டு விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் ஏற்கலாம். குடிநீர் பணிகள் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.
அலுவலகக் குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3814 / 2019 / இ2.
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>540</td>
<td>
பொருள் – 6
இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள நகராட்சி உரக்கிடங்கு வளாகத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு மதிப்பீட்டில் சொல்லப்பட்டதைவிட குறைவான அளவில்தான் மெஷினரி செட்—க்கான பணி முடிக்கப்பட்டுள்ளது. இதனால் மெஷினரி இயந்திரங்கள் வைக்கப்பட இயலாமல் உள்ளது.ஆகையால் மதிப்பீட்டில் உள்ள அளவிற்கு மெஷினரி செட் அமைப்பதற்கும் அதற்கு முதற்கட்டமாக தேவையான தளம் மற்றும் மின்வசதி ஆகிய பணிகள் பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்ள ரூ9.90 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கும் அவசர
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.12146/15/இ1 | |
| | 541 | **பொருள் – 7**<br><br>இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள பாதாள சாக்கடை மண் அள்ளும் ஜெட் ராட் வாகனம் டி.என்.67 ஏஎப் 8872ல் உள்ள வேறாஸ், நாசில், பால் வால்வு மற்றும் அடாப்டர் ஆகியவை பழுதடைந்துள்ளதை அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று வண்டியின் பழுதுகளை சீர்செய்ய உத்தேச செலவினத் தொகையான ரூ.2,80,000/–யை குடிநீர் நிதியில் இருந்து செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு- ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெறவும், குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.இ1/7318/2019 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 542 | **பொருள் – 8**<br><br>இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ன்படி சாலைகள் அமைக்கும் பணிகளை( ரூ500.00 இலட்சம்–3சிப்பங்கள்) 28.11.2019ந் தேதியில் நடைபெற்ற மறு மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளை மாநில அளவில் தினசரி நாளிதழில்களில் வெளியிட்டமைக்கு உண்டான செலவினத் தொகை ரூ57382/–யை வழங்கக் கோரி ரவி பப்ளிசிட்டி சர்வீஸ்,சென்னை அவர்களிடமிருந்து பில் பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.5513/19/இ1 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 543 | **பொருள் – 9**<br><br>இந்நகராட்சியின் அலுவலக வளாகம் பின் பக்கத்தில் சுகாதார வளாகம் கட்டும் பணிக்கு ரூ5.20 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கு ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று அதன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நகர்மன்றத்தீர்மான எண்.255. நாள்.28.02.2019ன் படி திரு.ஜீ.செல்வேந்திரன், ஒப்பந்ததாரர்க்கு 05.03.2019ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.மேற்குறிப்பிட்ட பணி மேற்கொள்ளப்படும் தருவாயில் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட கட்டிடத்தின் பரப்பளவை விட கூடுதல் பரப்பளவிற்கு செய்யப்பட வேண்டிய அவசியமும் அதே போல் மதிப்பீட்டில் வழிவகை இல்லாத இனங்களான சிறுநீர் கழிப்பறைகள், அதற்கான சுவர் மற்றும் தளத்தில் டைல்ஸ் பதித்தல் பணி,கூடுதல் செங்கல் கட்டுமானம், பூச்சு வேலை மற்றும் வண்ணம் அடித்தல் ஆகிய பணிகளுக்கு உண்டான கூடுதல் செலவினங்களை பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு திருத்திய மதிப்பீடு ரூ8.20 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.980/19/இ1 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 544 | **பொருள் – 10**<br><br>பொது சுகாதாரப்பிரிவு – JCB வாகனம் TN 67 AF 8139 M/S VETRI CONSTRUCTION EQUIPMENT COMPANY TATA HITACHIல் பழுதுப்பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி வண்டிக்கு கூடுதல் பழுதுகள் வந்துள்ளதால் பழுதுகள் பார்க்க கூடுதல் செலவு ரூ.66108/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>பணியின் அவசியம் கருதி முன் அனுமதி வழங்கப்படுகிறது.<br><br>ந.க.எண்.7586 /2019/ எச்1 . | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 545 | **பொருள் – 11**<br><br>இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ன்படி சாலைகள் அமைக்கும் பணிகளை( ரூ500.00 இலட்சம்–3சிப்பங்கள்) 18.12.2019ந் தேதியில் நடைபெற்ற மறு மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளை மாநில அளவில் தினசரி நாளிதழில்களில் வெளியிட்டமைக்கு உண்டான செலவினத் தொகை ரூ57382/–யை வழங்கக் கோரி ரவி பப்ளிசிட்டி சர்வீஸ்,சென்னை அவர்களிடமிருந்து பில் பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.5513/19/இ1 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 546 | **பொருள் – 12**<br><br>இந்நகராட்சியின் குடிநீர் விநியோகம் செய்யும் ஒண்டிபுலி பிரதான பம்பிங்மெயின் குழாய் 250 MM AC பைப்பு கண்மாய் கரை பகுதியில் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதால் நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் பணி செய்ய முடியமல் உள்ளது ஆதலால் விநியோகப் பணிகள் தொடர் பாதிப்பு இல்லாமல் செய்திட புதியதாக 200 MM PVC பைப்புகள் மற்றும் ஏர்வால்வுகள் வாங்கி பொருத்தும் பணிகள் மேற்கொள்ள அதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூபாய். 3,90,000/– (மூன்று இலட்சத்து தொன்னூரு ஆயிரம் மட்டும்) ஆகும். மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் இ2/7674 /2019. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 547 | **பொருள் – 13**<br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆனைக்குட்டம் குடிநீர் தலைமையிடம், மதுரை ரோடு தரைமட்டத்தொட்டி, VNPE பூங்கா வளாகத்தில் உள்ள தரைமட்டத் தொட்டி மற்றும் நகராட்சி அலுவலகத்தில் முறையே 125 KVA , 45 KVA , 82.5 KVA மற்றும் 62.5 KVA இர்லாஸ்கள் | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | கம்பெனி ( பிளிஸ் ) தயாரிப்பு ஜெனரேட்டர்களின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் 31.12.2019 ல் முடிவடைய உள்ளதால் தொடர்பராமரிப்பின் அவசியம் கருதி தற்போது ஒரு வருட காலத்திற்கு 01.01.2020 முதல் 31.12.2020 வரை இர்லாஸ்கள் கம்பெனியின் திருநெல்வேலி மண்டலத்திற்குரிய அங்கீகாரம் பெற்ற நிறுவனமான "SUN STAR ENGINEERING திருநெல்வேலியுடன் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் ( AMC ) செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனம் அனுப்பியுள்ள 16.12.2019 தேதிய விலைப்புள்ளிகள் குறிப்பிட்டவாறு வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தக்கட்டணம் தொகை ரூ.87790/—செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.7613 /2019/ இ2 | |
| | 548 | **பொருள் – 14**<br><br>விருதுநகர் நகராட்சியின் ஆனைக்குட்டம் மற்றும் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டம் வாயிலாக நகர் பகுதிகளின் விநியோகம் அனைத்து வார்டுகளிலும் குளோரின் கலந்து செய்யப்படும் அதற்கான குளோரின் கேஸ் மோட்டார் பழுது ஏற்பட்டு உள்ளதை உடன் சரி செய்து பொதுமக்களின் குடிநீர் பயன்பாடு தொடர்ந்து செய்திட வேண்டிய அத்தியாவசிய அவசியம் கருதி M/s.R.K.ENTER PRISES, PALAKKAD அவர்களின் மூலம் தேவையான பராமரிப்பு பொருட்கள் புதியதாக விநியோகம் செய்து பழுது நீக்கம் செய்து இயக்கம் செய்தமைக்கு அதற்கான பில் பட்டியல் தொகை ரூ.97750/— நாள்.09.12.2019ல் வழங்கப்பட்டு உள்ளது. மேற்படி பணி அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் விதி பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு மன்றம் பதிவு செய்யலாம் .<br>ந.க.எண்.6294 /2019/ இ2 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 549 | **பொருள் – 15**<br><br>விருதுநகர் நகராட்சியின் ஆனைக்குட்டம் தலைமை குடிநீரேற்று நிலையத்தின் சுக்குரார் பட்டி கோடை கால நீர்த்தேக்கம் 36’’பைப்லைன் RCC மற்றும் 15’’ பைப்பு CI உடைப்புகள் 6 இடங்களில் ஏற்பட்டதன் காரணமாக குடிநீர் பணிகள் செய்திட முடியாமல் இருந்தது எனவே குடிநீர் பயன்பாட்டின் அவசியம் கருதி புதியதாக மேற்கான் இடத்தில் பணிகள்<br><br>–<br>M./s. ஆர்.சுந்தர்ராஜ் அவர்களின் மூலம் தேவையான பாரமரிப்புபொருட்கள் விநியோகம் செய்து பழுது நீக்கம் செய்து இயக்கம் செய்தமைக்கு அதற்கான பில் பட்டியல் தொகை ரூ 161440/– நாள் 27.12.2019ல் வழங்கப்பட்டு உள்ளது . மேற்படி பணி அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் விதி பிரிவு 15 ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .<br>ந.க.எண். இ2/6819/2019 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 550 | **பொருள் – 16**<br><br>இந்நகராட்சியில் அமைந்துள்ள நகராட்சி பொறியாளர் குடியிருப்பு அருகில் 03.12.2019ல் காலை 11.00 மணிக்கு நடைபெற்ற பொது ஏல அறிவிப்பில் (உபயோகமற்ற பொருட்கள்) 11பேர் கலந்து கொண்டனர்.அதில் (அரசாங்க மதிப்பு ரூ47725/–) அதிகபட்ச ஏலத் தொகையாக ரூ48500/–க்கு திரு.கே.வனராஜன், ஒப்பந்ததாரர் எடுத்துள்ளார்.ஆகையால் மேற்கண்ட தொகையை அன்னார் கருவூலகத்தில் செலுத்தியபின் ஏலத்தில் வைக்கப்பட்டிருந்த உபயோகமற்ற பொருட்களை எடுத்து செல்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.இ1/6984–2/2019 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 551 | **பொருள் – 17**<br><br>இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள பாதாள சாக்கடை மண் அள்ளும் ஜெட் ராட் வாகனம் டி.என்.67 ஏஎப் 8872ல் உள்ள வேறாஸ், நாசில்,பால் வால்வு மற்றும் அடாப்டர் ஆகியவை பழுதடைந்துள்ளதை அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டுள்ளவாறு பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு.<br>1. பி.ஜீ.ஜெட்கீளினிங் சிஸ்டம்ஸ் – ரூ.2,74,940/–<br>2. ஏன்.எம்.வைறக் பிரஸ்ஸர்ஸ் வாட்டர் ஜெட் கீளினிங் சிஸ்டம் – ரூ.3,08,446/–<br>3. இஎஸ்பி.வாட்டர் ஜெட் சிஸ்டம் – ரூ.2,93,420/–<br><br>மேற்கண்ட 3 நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள பி.ஜீ.ஜெட்கீளினிங் சிஸ்டம்ஸ், சென்னை அவர்களுக்கு வழங்கலாம்.<br><br>அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.இ1/7318/2019. | |
| | 552 | **பொருள் – 18**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் குப்பை எடுக்கும் ஆட்டோ வாகனம் INSURANCE POLICY 30.12.2019 முதல் 30.12.2020 வரை THE NEW INDIA ASSURANCE –CO – LTD ல் பாலிசி எடுக்க கீழ்கண்ட விபரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது<br>TN 67 BD / 8068 க்கு ரூ= **19283/–**<br>TN 67 BD / 8060 க்கு ரூ= **19283/–**<br>TN 67 BD / 8056 க்கு ரூ= **19283/–**<br>––––––––––––<br>ரூ= **57,849/–**<br>––––––––––––<br>மேற்படி தொகை ரூ.**57849** /– THE NEW INDIA ASSURANCE- CO- LTD க்கு POLICY எடுக்க உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.7371 /2019/ எச்1. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 553 | **பொருள் – 19**<br><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான ஜெட் ராட் வாகனம் டி.எண்.67.ஏஇ.3687 வாகனத்திற்கு ஹோஸ் மற்றும் இதர சாமான்கள் டி.சதிஸ்பாபு (பி.ஜீ.ஜெட் கீளினிங் சிஸ்டம்,சென்னை) என்பவர் மூலம் வாங்கிய வகையில் அதற்கான பில் பட்டியல் தொகை ரூ1,54,580/– நாள்13.11.2019ல் வழங்கப்பட்டு உள்ளது. மேற்படி பணி அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் விதி பிரிவு 15 ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .<br>ந.க.எண்.இ1/6250/2019 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 554 | **பொருள் – 20**<br><br>இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள நகராட்சி அலுவலகம் பின்புறம் பழைய அருப்புக்கோட்டை சாலையில் உள்ள அங்கன்வாடி மையத்தில் (வார்டு எண்.30) மராமத்துப் பணிகள் பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்ள ரூ1.20 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.7318–1/19/இ1 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 555 | **பொருள் – 21**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்36ல் அமைந்துள்ள சௌந்திரபாண்டியன் ரோடு காட்டு தெருவில் 2 எல்.இ.டி விளக்குகள் பொருத்தும் பணியினை பார்ப்பதற்கு ரூ 0.26 இலட்சம் மதிப்பீட்டில் சட்ட மன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2996/2019/சி3. நாள்28.11.2019ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 27.12.2019ல் ஒப்பதப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வஎ<br>ண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th><th></th></tr>
<tr><td>1</td><td>திரு.தனம் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்–விருதுநகர்</td><td>மதிப்பீடு விலை விகிதத்தில்</td><td></td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சௌந்திரபாண்டியன்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 20.00 சதவிகிதம் அதிகம்</td><td></td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலை விகிதத்தில் அளித்துள்ள திரு.தனம் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.இ1/5696–6/2019.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>556</td>
<td>
பொருள் – 22<br>
இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்3ல் அமைந்துள்ள விக்னேஷ் காலனியில் மேற்கு காவல் நிலையம் பின்புறம் லோட்டஸ் சாம்பிராணி கம்பெனி அருகில் 1 எல்.இ.டி விளக்கு பொருத்தும் பணியினை பார்ப்பதற்கு ரூ 0.18 இலட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண்.2996/2019/சி3.நாள்28.11.2019ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 27.12.2019ல் ஒப்பதப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வஎ<br>ண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.தனம் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்–விருதுநகர்</td><td>மதிப்பீடு விலை விகிதத்தில்</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சௌந்திரபாண்டியன்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 20.0 சதவிகிதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலை விகிதத்தில் அளித்துள்ள திரு.தனம் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்,ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். .<br>
அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.இ1/5696–5/2019
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>557</td>
<td>
பொருள் – 23<br><br>
இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்30ல் அமைந்துள்ள நகராட்சி வி.என்.பி.ஆர் பூங்காவில் 11 எல்.இ.டி விளக்குகள் அமைக்கும் பணியினை பார்ப்பதற்கு ரூ1.40 இலட்சம் மதிப்பீட்டில் சட்ட மன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2996/2019/சி3. நாள்28.11.2019ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 27.12.2019ல் ஒப்பதப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வஎ ண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.தனம் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.0 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சௌந்திரபாண்டியன்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 13.4 சதவிகிதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள திரு.தனம் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். .<br>
அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். இ1/5696–4/2019
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>558</td>
<td>
பொருள் – 24<br>
இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நகராட்சி அலுவலக பின்புறம் உள்ள வார்டு எண்.30ல் பழைய அருப்புக்கோட்டை சாலையில் உள்ள அங்கன்வாடி மையத்தில் மராமத்துப் பணிகள் ரூ1.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணியினை பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்ள ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 27.12.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>வஎண்</td><td>ஒப்பந்ததாரர் விபரம்</td><td>மதிப்பீட்டு விலை விகிதம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.கே.காட்டுராஜன் அன் பிரதர்ஸ்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஆர்.சுந்தர்ராஜ்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.41 சதவிகிதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள திரு.கே.காட்டுராஜன் அன்பிரதர்ஸ், ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். இ1/7318–1/2019.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>559</td>
<td>
பொருள் – 25<br>
இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார்ச்சாலை, சிமெண்ட் சாலை, பேவர்பிளாக் தளம் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி ரூ2.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணியினை பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்ள ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 24.12.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வஎண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.ஆர்.சுந்தர்ராஜ்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.செந்தூர் கன்ஸ்ட்ரக்ஸன்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.22 சதவிகிதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள திரு.ஆர்.சுந்தர்ராஜ், ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
அலுவலகக் குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.இ1/7318–2/2019
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>560</td>
<td>
பொருள் – 26<br>
இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நகராட்சி உரக்கிடங்கில் குப்பை பிரித்தாளும் இயந்திரம் நிறுவுவதற்கான தரைத்தளம் மற்றும் மின் வசதி செய்தல் ரூ9.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணியினை பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்ள ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 24.12.2019ல் ஒப்பதப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வஎண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.செந்துார் கன்ஸ்ட்ரக்ஸன்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஆர்.சுந்தர்ராஜ்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.71 சதவிகிதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள திரு.செந்துார் கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
அலுவலகக் குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.இ1/12146/2015
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>561</td>
<td>
பொருள் – 27<br>
இந்நகராட்சிக்குட்பட்ட தெற்கு ரதவீதி,மேற்கு பாண்டியன் காலனி,பி1பி1 ரோடு, பி2பி2 ரோடு மற்றும் பழைய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைக்கும் பணி, கத்தாளம் பட்டி ரோடு, ஏ.பி.சண்முகம் தெரு,அதன் குறுக்குத் தெரு 1,2,3 ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு (சிப்பம் 1) ரூ190.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20 நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.463 நாள் 30.09.2019ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள இரண்டாவது அழைப்பாக 18.12.2019ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன (மின்னனு ஒப்பந்தப்புள்ளி மூலம் எந்தவித ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படவில்லை) அன்றைய தேதியில் ஒப்பந்தப்புள்ளி பெட்டியின் மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு.
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 1. திரு.டி.சிவக்குமார்,ஒப்பந்ததாரர்,விருதுநகர்<br>2. திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன்,ஒப்பந்ததாரர்,விருதுநகர்<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் பிரதான உறை,தொழில் நுட்ப உறை 19.12.2019 அன்று திறக்கப்பட்டு கூர்ந்தாய்பு குழுவினரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்.2ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன்,ஒப்பந்ததாரர்,விருதுநகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தகுதி பெற்றுள்ளது. வரிசை எண் 1ல் உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தேவையான ஆவணங்கள் இல்லாததால் நிராகரிக்கப்பட்டது.<br>திட்டப்பணிகள் என்பதாலும், இரண்டாவது அழைப்பாக இருப்பதாலும் ஒரு ஒப்பந்தப்புள்ளி (Single Tender) திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன் என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு 23.12.2019 அன்று அன்னாரது விலை உறை (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன் என்பவர் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.90 சதவிகிதம் அதிகமான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.மதிப்பீட்டைவிட கூடுதலான சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால் ஒப்பந்ததாரரிடம் விலைகுறைப்பு செய்து தர இந்நகராட்சியில் இருந்து சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு 24.12.2019ல் கடிதம் அனுப்பப்பட்டது.அதன்படி திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு கடிதம் அன்றைய தேதியில் கொடுத்தன்பேரில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.50 சதவிகிதம் அதிகமான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.திட்டப்பணிகள் மற்றும் இரண்டாம் அழைப்பு என்பதால் திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு-மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.இ1/5513/2019. | |
| | 562 | **பொருள் – 28**<br>இந்நகராட்சிக்குட்பட்ட ஏ.ஏ ரோடு, எல்.ஐ.ஜி.காலனி, அதன் குறுக்குத் தெரு 1,2, பிள்ளையார் கோயில் தெரு, பர்மா காலனி 5,6 வது குறுக்குத் தெரு , ஆவலப்பசாமி கோயில் தெரு மற்றும் கட்டையாபுரம் ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைக்கும் பணி, ஏ,ஏ.ரோடு, குல்லூார் சந்தை ரோடு, சிவந்திபுரம் தெரு 1, பவுண்டுத் தெரு மற்றும் ெ வள்ளையன் தெரு ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு (சிப்பம் 2 ) ரூ200.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20 நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகர்மன்ற | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீர்மான எண்.463 நாள் 30.09.2019ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள இரண்டாவது அழைப்பாக 18.12.2019ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன (மின்னனு ஒப்பந்தப்புள்ளி மூலம் எந்தவித ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படவில்லை) அன்றைய தேதியில் ஒப்பந்தப்புள்ளி பெட்டியின் மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அ வை பின்வருமாறு.<br>1. திரு.டி.சிவக்குமார்,ஒப்பந்ததாரர்,விருதுநகர்<br>2. திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன்,ஒப்பந்ததாரர்,விருதுநகர்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் பிரதான உறை, தொழில் நுட்ப உறை 19.12.2019 அன்று திறக்கப்பட்டு கூர்ந்தாய்பு குழுவினரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்.2ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன், ஒப்பந்ததாரர், விருதுநகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தகுதி பெற்றுள்ளது. வரிசை எண் 1ல் உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தேவையான ஆவணங்கள் இல்லாததால் நிராகரிக்கப்பட்டது. திட்டப்பணிகள் என்பதாலும், இரண்டாவது அழைப்பாக இருப்பதாலும் ஒரு ஒப்பந்தப்புள்ளி (Single Tender) திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன் என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு 23.12.2019 அன்று அன்னாரது விலை உறை (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன் என்பவர் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.91 சதவிகிதம் அதிகமான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.மதிப்பீட்டைவிட கூடுதலான சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால் ஒப்பந்ததாரரிடம் விலைகுறைப்பு செய்து தர இந்நகராட்சியில் இருந்து சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு 24.12.2019ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு கடிதம் அன்றைய தேதியில் கொடுத்தன்பேரில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.50 சதவிகிதம் அதிகமான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.திட்டப்பணிகள் மற்றும் இரண்டாம் அழைப்பு என்பதால் திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு-மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.இ1/5513/2019 | |

| | | | |
|---|---|---|---|
| | 563 | **பொருள் – 29**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட ஆனைக்குட்டம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து கோடைக்கால நீர்த்தேக்கத் தொட்டி வரை உள்ள பகுதியில் பெயர்ப்பலகையுடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி (சிப்பம் 3 ) ரூ110.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20 நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.463 நாள் 30.09.2019ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள இரண்டாவது அழைப்பாக 18.12.2019ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன (மின்னனு ஒப்பந்தப்புள்ளி மூலம் எந்தவித ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படவில்லை) அன்றைய தேதியில் ஒப்பந்தப்புள்ளி பெட்டியின் மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு.<br>1. திரு.டி.சிவக்குமார்,ஒப்பந்ததாரர்,விருதுநகர்<br>2. திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன்,ஒப்பந்ததாரர்,விருதுநகர்<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் பிரதான உறை,தொழில் நுட்ப உறை 19.12.2019 அன்று திறக்கப்பட்டு கூர்ந்தாய்பு குழுவினரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தேவையான அனைத்து சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளதின் பேரில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதியானவை என தீர்மானிக்கப்பட்டு 23.12.2019 அன்று விலை உறை (Price Bid) திறக்கப்பட்டு இரண்டு விலைப்பட்டியல்களும் மதிப்பீட்டு விலைக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.<br><br>1. திரு.டி.சிவக்குமார்,ஒப்பந்ததாரர், விருதுநகர் – 7.00 சதவிகிதம் மதிப்பீட்டு விலையை விட அதிகம்<br>2. திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன்,ஒப்பந்ததாரர்,விருதுநகர் – 4.91 சதவிகிதம் மதிப்பீட்டு விலையை விட அதிகம்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன் என்பவர் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.91 சதவிகிதம் அதிகமான (வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி) அளித்துள்ளார். மதிப்பீட்டை விட கூடுதலான சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால் ஒப்பந்ததாரரிடம் விலைகுறைப்பு செய்து தர இந்நகராட்சியில் இருந்து சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு 24.12.2019ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு கடிதம் அன்றைய தேதியில் கொடுத்தன்பேரில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.50 சதவிகிதம் அதிகமான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். திட்டப்பணிகள் மற்றும் இரண்டாம் அழைப்பு என்பதால் திரு.எஸ்.ஹர்ஷவர்த்தனன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு-மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.இ1/5513/2019 | |